**23.01.2026.**

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.191/2025</u>

அ.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவகங்கை | | |
| க /பெ | வினோத் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | வீட்டு குடித்தனம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 30/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.01.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி வீரபத்திரனை எனக்கு தெரியும். அவர் எனக்கு அண்ணன் முறை ஆவார். வீரபத்திரன் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையில் எந்த முன் விரோதமும் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நாங்கள் எங்கள் வீட்டில், நான், எனது கணவர் வினோத், என்பாண்டி மாரிமுத்து, என் மகன்கள் தரணிதரன், மோனிஷ் ஆகியோர் அன்று இரவு வீட்டில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தபோது, எங்கள் வீட்டின் கூரை எரிவதாக வெளிச்சம் தெரிந்து நாங்கள் எழுந்து பார்த்தோம். வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. நாங்கள் வெளியே சென்று இதற்கு காரணம் யார் என்று தேடினோம். யார் என்று எங்களுக்கு தெரியவில்லை. வீடு எப்படி எரிந்தது என்று எங்களுக்கு தெரியாது. வீட்டின் மூலையில் எரிந்து கொண்டிருந்தது. தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தோம். தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்தனர். இது சம்பந்தமாக விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் சென்று

விவரம் சொன்னேன். விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய போலீசார் என்னிடம் எழுதாத ஒரு வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். காவல்துறையினர் வந்து விசாரணை செய்தார்கள். ஆனால் என்னை விசாரணை செய்யவில்லை. அங்கிருந்து பொருட்கள் எதையாவது காவல்துறையினர் எடுத்துச் சென்றார்களா? என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு போலீசார் என்னை பார்க்கவில்லை. விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் நான் எங்கள் குடும்பத்திற்கும், வீரபத்திரன் குடும்பத்திற்கும் இடையே முன் விரோதம் இருந்தது என்றும், வீரபத்திரனின் மகன்களான மணிபாரதி, வினோத், மற்றும் பழனி மகன் ஆகாஷ், ரமேஷ் மகன் பரத், ஆகியோர் மீது நான் புகார் கொடுத்து அது சம்பந்தமாக முன் விரோதம் இருந்தது என்றும், இந்நிலையில் கடந்த 01/06/2023 ஆம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் வீரபத்திரன் குடித்துவிட்டு வந்து தகராறு செய்தார் என்றும், அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், உங்கள் வீட்டை கொளுத்தி உங்களை ஊரை விட்டு துரத்தி விடுகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார் என்றும், பிறகு நான், எனது கணவர், என் பாட்டி மற்றும் என் இரண்டு பிள்ளைகளுடன் வீட்டில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தோம் என்றும், விடியற்காலை 3.00 மணியளவில் ஒரு பக்கம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது என்றும், நாங்கள் வெளியில் ஓடி வந்து பார்த்தபோது அந்தப் பக்கம் இருந்து வீரபத்திரன் ஓடினார் என்றும், அங்கிருந்த ரமேஷ், வெங்கடேஷ், அஜித் குமார், மற்றும் பழனி ஆகியோர்களின் உதவியுடன் வீட்டில் இருந்த கொண்டிருந்த தீயை அணைத்தோம் என்றும், பிறகு தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்து அவர்களும் தீயை அணைத்தார்கள் என்றும், முதல் நாள்

சொல்லியது போல் வீரபத்திரன் தான் வீட்டை கொளுத்தி இருக்கக்கூடும் என்று விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான புகார் ஒன்றை கொடுத்துக்கொண்டேன் என்றும், ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் என்றும், என்னுடைய வீட்டில் இருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகிவிட்டது என்றும், அதன் சேத மதிப்பு சுமார் ரூ.50,000/- இருக்கும் என்றும், விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>இல்லை.</u>

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>